உதவி அமர்வு நீதிமன்றம், மானாமதுரை
எஸ்.சி.12/2022

05.01.2024

அ.சா.3 (அங்குத்தாய்)

கு.வி:

அ.சா.1 எனது மகன் என்றால் சரிதான். எனது மகன் அ.சா.1 கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் சரவணா மருத்துவமனையிலிருந்த பொழுது எனது மகன் வழக்கிற்கான புகார் அளித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது மகனை, நான் சரவணா மருத்துவமனையில் 11.12.2020ம் தேதி காலை 9 மணிக்கு சிகிச்சைக்காக சேர்த்தேன் என்றால் சரிதான். வழக்கின் முதல் தகவல் அறிக்கை 10.12.2020 அன்று 23.30 மணிக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மகன் புகார் அளிப்பதற்கு ஒரு நாளுக்கு முன்பாகவே வழக்கு பதிவு செய்யப்பட்டதாக ஆவணங்களில் உள்ளது என்றால் சரிதான். எனது மகன் அ.சா.1, எனது கணவர் அ.சா.2, சாட்சி 4 சரண்யா எனது மருமகள், சாட்சி 5 தவச்செல்வம் எனது மருமகன் என்றால் சரிதான். பொதுமக்கள் யாரும் சம்பவத்தை பார்த்ததாக இந்த வழக்கில் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். சாட்சி 5 தவச்செல்வம் எனது மருமகன் தாலிக்குளம் கிராமத்தில் வசிக்கிறார் என்றால் சரிதான். சம்பவத்தன்று சாட்சி தவச்செல்வம் எனது வீட்டிற்கு வந்ததாக எனது 161(3) வாக்குமூலத்திலோ, நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்திலோ நான் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவத்திற்கு பின்னர் போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் எனக்கு தேதி ஞாபகம் இல்லை. போலீசார் என்னை எத்தனை முறை அழைத்து விசாரித்தார்கள் என்றால் இருமுறை அழைத்து விசாரித்தார்கள். எனது மகன் அ.சா.1 தனது முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணையில் நான் சம்பவம் நடந்த பிறகு தான் சம்பவ இடத்திற்கு போனதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எனக்கும் 1ம் எதிரிக்கும் இடையில் நிலப்பிரச்சனைஇருப்பதாக எனது 161(3) வாக்குமூலத்திலும், நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நிலப்பிரச்சனை உள்ள இடத்தின் சர்வே எண்ணை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், எனக்கு தெரியாது. 1ம் எதிரிக்கு எனது நிலத்திற்கு அருகில் நிலப்பிரச்சனை இருப்பதாக 161(3) வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது நிலத்திற்கு அருகில் 1ம் எதிரிக்கு பாத்தியமான இடம் இருப்பதற்கான சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வது போல் 1ம் எதிரிக்கும் எங்களுக்கும் எந்த நிலப்பிரச்சனையும் இல்லை என்றும் நிலப்பிரச்சனை இருந்தால் பிரச்சனைக்குரிய நிலத்தின் சர்வே எண்ணை சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. எனது 161(3) வாக்குமூலத்திலும், முதல்

விசாரணையிலும் 10.12.2020 தேதிக்கு முன்பாக 1 மாத காலமாக 1ம் எதிரிக்கும் எங்களுக்கும் நிலப்பிரச்சனை இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். டிசம்பர் மாதம் 10.12.2020ம் தேதி இரவு 8.30 மணிக்கு நன்றாக இருட்டாக இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் எந்த வெளிச்சமும் இல்லை என்றால் வெளிச்சம் இருந்தது. சம்பவம் நடந்த இடத்தில் தெருவிளக்கு இருந்தது. நான் 161(3) மறு வாக்குமூலத்தில் சம்பவம் நடந்த இடம் இருட்டாக இருந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் தெருவிளக்கு இருந்தது. சம்பவ இடத்தில் தெருவிளக்கு இருந்ததாக எனது 161(3) வாக்குமூலத்திலோ, அல்லது நீதிமன்றத்தின் முதல் விசாரணையிலும் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல, நான் சொல்லியுள்ளேன். நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில் எதிரிகள் அனைவருக்கும் எங்களுக்கும் இடையே நிலப்பிரச்சனை உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் தாக்கல் செய்த வரைபடத்தில் சம்பவம் எனது வீட்டிற்கு முன்னால் நடந்ததாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது வீட்டில் கழிவறை உள்ளதாக போலீசார் தாக்கல் செய்த வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது வீட்டில் கழிவறை உள்ளதால் எனது மகன் வெளியே கழிப்பறைக்கு சென்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான், எனது மகன் அ.சா.1 உடன் சென்றதாக 161(3) வாக்குமூலத்திலோ, நீதிமன்ற சாட்சியத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது 161(3) வாக்குமூலத்தில் 5 நபர்கள் அ.சா.1 யை தாக்கியுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை சாட்சியத்தில் எனது மகன், மருமகன் சம்பவத்தை நேரில் பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகனை 3 மருத்துவமனைகளில் அதாவது சிவகங்கை அரசு மருத்துவமனை, மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை, அதன்பிறகு மதுரை சரவணா தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்ததாக ஆவணங்களில் உள்ளது என்றால் சரிதான். எனது மகனை மதுரை சரவணா மருத்துவமனையில் சேர்த்தபொழுது எனது மகனுக்கு வழக்கிற்காக வழங்கப்பட்ட காயச்சான்றிதழில் சிறுகாயம் என்று உள்ளது என்றால் சரிதான். எனது மகன் அ.சா.1 யை சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்ததாகவோ, மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை அளித்ததாகவோ மற்றும் சரவணா தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளித்ததாகவோ சிகிச்சை ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சிகிச்சை அளித்த ஆவணங்கள் அடிப்படையில் தான் காயச்சான்று வழங்கப்படும் என்றால் சரியல்ல. எனது மகனை அரசு மருத்துவமனை சிவகங்கையில் சிகிச்சைக்கு சேர்ந்த பொழுது எனது மகன் மது அருந்தியதாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மகன் இருசக்கர வாகனத்திலிருந்து மது போதையில் சென்று கீழே விழுந்ததில் ஏற்பட்ட சிறு காயத்தை

பயன்படுத்தி எதிரிகளை பழிவாங்கும் நோக்கில் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகனை சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்த பொழுது நான் என் கணவருடன் சென்றிருந்தேன் என்றால் சரிதான் .விபத்து பதிவேடு பதிவு செய்யும்பொழுது நான், எனது கணவர், எனது மகன் ஆகியோர் இருந்தோம் என்றால் சரிதான். ஆனால் அந்த விபத்து பதிவேட்டில் எதிரிகள் தாக்கியதாக எதிரிகள் பெயரை நாங்கள் மூவரும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் வாள், அருவாள் கொண்டு எனது மகனை வெட்டியதாக எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பொதுவாக வாள், அருவாளால் வெட்டினால் காயம் பெரியதாக இருக்குமா இல்லையா என்றால் பெரிய காயமாகத்தான் இருக்கும். ஆனால் எனது மகன் அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் சிறு காயம் என்று எனது மகனுக்கு சிகிச்சை அளித்ததாக சொல்லப்படும் சரவணா மருத்துவமனையில் 15.12.2020ம் தேதி காயச்சான்று வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 சம்பவ இடம் மாரநாடு கால்வாய் அருகில் உள்ள சுடுகாட்டுக்கு அருகில் என்று அவரது குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சம்பவ இடம் எனது வீட்டின் அருகில் இல்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் எங்களுக்கும் இடப்பிரச்சனை இல்லை என்றால் சரியல்ல. எனது மகன் வழக்கிற்காக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும் எனது மகனை எதிரிகள் தாக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

உதவி அமர்வு நீதிபதி
மானாமதுரை